DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 83/2019** |
| Deposition of Witness for | : PW4 |
| Name | : திரு. செல்லத்துரை |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 18.06.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 18 June 2026.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

முதல்விசாரணை:

நான் தற்போது குருவிகுளம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்பையா மற்றும் உதவி ஆய்வாளர் காமராஜ் ஆகியோர்கள் கையொப்பம் நன்கு தெரியும். அவர்கள் தற்போது பணிமாறுதலாகி வேறு மாவட்டங்களுக்கு சென்று விட்டார்கள். வழக்கின் சூழ்நிலைக்கருதி ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 19.11.2015–ம் தேதி 20.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்பையா நிலையப்பொறுப்பில் இருந்தபோது நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகார் மனுவைப் பெற்று அ.சா.1 சந்திரசேகர் அதன்தன்மைக்கேற்ப

காவல்நிலையக்குற்ற எண்.237/2015 இ.த.ச.பிரிவுகள் 420, 294(பி), 506(ii) –ன்படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் காமராஜ் பார்வையில் அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, 20.11.2015–ம் காலை 7.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகன் மற்றும் கணேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் சந்திரசேகர், அருள்ராஜ் கணபதி, முருகன், கணேசன் மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்பையா ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தார். எதிரியை தேடிவந்த நிலையில் வேறொரு வழக்கில் 15.07.2016–ல் சங்கரன்கோவில் கிளைச்சிறையில் இருந்தவரை நடைமுறை கைது செய்தார் பின்னர்சாட்சி வாக்குமூலத்தில் இருந்து அவரது புலன் விசாரணையில் இருந்து எதிரியின் மீது குற்றம் உறுதியானதால் 06.08.2016–ம் தேதி எதிரிகள் மீது இ.த.ச .பிரிவுகள் 420, 294(பி), 506(ii)–ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் முதல்விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் புகார் மனுவைப் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும், சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அரசுதரப்பு சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரியை சம்பிரதாய கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல, எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

(Sd/-)M.Mari

Judicial Magistrate,

Sankarankovil